IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 282/2008 |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | S.Murugesan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 18-06-2019**

33. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.11 எந்த வருடம் மற்றும் எந்த பசலி ஆண்டுக்குரியது என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா?
குறிப்பிடப்பட்டுள்ளது.

34. எந்த ஆண்டு மற்றும் எந்த பசலி வருடம் என இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
மேற்படி ஆவணத்தில் வருடம் மற்றும் பசலி குறிப்பிடப்பட்டுள்ளதாக எவ்வித குறிப்புகளும் காணப்படவில்லை.

35. வா.சா.ஆ.9 மற்றும் 11 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேல்சேர்வை என்பவருக்கு இன்றைய தேதியில் எவ்வித பாத்தியமும் இல்லை என்று சொன்னால்?
எனது இடத்திற்கு தென்புறம் மேற்படி வேல்சேர்வை இடம் உள்ளது. அவரது இடத்திற்கு வடபுறம் எங்களுக்கு பாத்தியமான இடம் உள்ளது.

36. வா.சா.ஆ,9 மற்றும் 11ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் வேல்சேர்வைக்கு பாத்தியமில்லை என்று சொன்னால்?
சரிதான். எங்களுக்கு தான் அதில் கண்ட சொத்து பாத்தியமானது.

37. வா.சா.ஆ,9 மற்றும் 11ல் கண்ட சொத்துக்கள் முழுவதும் எங்களுக்கு தான் பாத்தியம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்?

சரியல்ல.

38. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.9 மற்றும் 11 ஆவணங்களில் சர்வே எண். 334/14 கட்டுப்படவில்லை என்று சொன்னால்?

சரிதான்.

39. தற்போதைய சர்வே எண்.334/8 என்பது தாமோதரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால்?

சரியல்ல. அது எங்களுக்கு தான் பாத்தியமானது.

40. தற்போதைய சர்வே எண்.334/9 என்பது சர்வே எண்.334/9A1, சர்வே எண்.334/9A2 மற்றும் சர்வே எண்.334/9B என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால்?

சரிதான்.

41. மேற்படி சர்வே எண்.334/9A1 என்பது ராஜம்மாள் என்பவர் பெயரிலும், சர்வே எண்.334/9A2 என்பது பழனிச்சாமி என்பவர் பெயரிலும், சர்வே எண்.334/9B என்பது ராஜா என்பவர் பெயரிலும் உள்ளது என்று சொன்னால்?

மேற்படி சர்வே எண்ணில் கண்ட சொத்துக்கள் எங்களது சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது. அதன் உட்பிரிவுகள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது.

42. வா.சா.ஆ.5 பரிவர்த்தனை பத்திரத்தில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய பத்திரங்கள் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால்?

குறிப்பிடப்பட்டுள்ளது.

43. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய ஆவணங்கள் மூலம் கிடைத்த சொத்துக்களை முத்துச்சாமி கோனார் மகன் வெள்ளைச்செருவக்கோனார் அனுபவித்து வந்தார் என்றும், வா.சா.ஆ.5 பரிவர்த்தனை பத்திரம் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய பத்திரங்களில் கண்ட அனைத்து சொத்துக்களையும் வெள்ளைமுத்துக்கோனார் மகன் செருவக்கோனார் என்பவருக்கு கிடைத்தது என்பது தான் எங்களது வழக்கு என்று சொன்னால்?

வா.சா.ஆ,1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய பத்திரங்களின் படி கிடைக்கபெற்ற சொத்துக்களை முத்துச்சாமி கோனார் மகன் வெள்ளைச்செருவக்கோனார் என்பவரும் மற்றும் வெள்ளைமுத்துக்கோனார் மகன் செருவக்கோனார் என்பவரும் பிரித்து கொண்டார்கள். மேற்படி இருவரும் வா.சா.ஆ,5 பரிவர்த்தனை பத்திரத்தின் அடிப்படையில் பிரித்துக்கொண்டார்கள்.

44. வா.சா.ஆ.5ல் கண்ட A செடியூல் சொத்துக்களில் சர்வே எண்.334/6, 334/1P, 334/8P, 334/9P காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால்?

சரிதான். ஆனால், வா.சா.ஆ,1 முதல் 4 வரையிலான கிரைய பத்திரங்களில் மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்து விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

45. வா.சா.ஆ,5 B செடியூலில் சர்வே எண்.334/1, 334/9, 334/14 ஆகிய சர்வே எண்களில் மொத்தம் 6 லக்க சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால்?

சரிதான்.

46. வா.சா.ஆ5ல் B செடியூலில் காண்பிக்கப்பட்டுள்ள 6 லக்க சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 97.80 செண்ட் மட்டும் தான் என்று சொன்னால்?

சரியல்ல. மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 89 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

47. வா.சா.ஆ5ல் B செடியூலில் காண்பிக்கப்பட்டுள்ள 6 லக்க சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 89 செண்ட் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்?

சரியல்ல.

48. வா.சா.ஆ,5 B செடியூலில் 5வது லக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.334/1.9.14ல்

சர்வே எண்.334/1ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

சர்வே எண்.334/9ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

சர்வே எண்.334/14ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

என்று என்னால் தனித்தனியாக பிரித்துக்கூற இயலுமா?

சர்வே எண்.334/1Eல் வீடு கட்டுப்பட்டுள்ளது. சர்வே எண்.334/9 மற்றும் சர்வே எண்.334/14ல் கலமும் காடும் கட்டுப்பட்டுள்ளது.

49. சர்வே எண்.334/1Eல் கட்டுப்பட்ட வீட்டின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு?

1930ம் வருட கிரைய பத்திரத்தில் கட்டுப்பட்ட 4 ஆவணத்தின் மூலம் மொத்தம் 47 செண்ட் சொத்து கிடைக்கப்பெற்றது.

50. வா.சா.ஆ,5 B செடியூலில் 5வது லக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.334/1.9.14ல் சொல்லப்பட்டுள்ள 47 செண்டில்

சர்வே எண்.334/1ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

சர்வே எண்.334/9ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

சர்வே எண்.334/14ல் கட்டுப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

என்று என்னால் தனித்தனியாக பிரித்துக்கூற இயலுமா?

சர்வே எண்.334/1ல் செண்ட் 49-ம்,

சர்வே எண்.334/9ல் செண்ட் 60-ம்,

சர்வே எண்.334/14ல் செண்ட் 27-ம் கட்டுப்பட்டது ஆகும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.). D. ராம்கணேஷ், எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி